தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 62/SCIC/2024**

திரு.எ.சித்தன் த/பெ.எல்லப்பன் - புகார்தாரர்
No.679, B-1/6, மந்திதோப்பு ரோடு
பாலாஜி நகர், கோவில்பட்டி,
தூத்துக்குடி- 628 502
Phone:94431 22938.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
கோவில்பட்டி சார்பதிவகம்
தூத்துக்குடி- 628 502.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **15.07.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 14.08.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.09.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 10.10.2024 |
| 5. | மனுதாரரின் புகார் மனு | 03.01.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 15/07/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், கோவில்பட்டி சார்பதிவகம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "ஆவண எண்.1191/2023 பத்திரம் பதிவு செய்ய உரிமையாளர் சமர்ப்பித்த அசல் ஆவணங்களின் நகல் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.எ.சித்தன் அவர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.இ.முத்துமாரியப்பன், உதவியாளர், கோவில்பட்டி சார்பதிவகம் அவர்கள் உரிய அங்கீகாரக் கடிதத்துடன் ஆஜரானார். இனி வருங்காலங்களில், பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் விசாரணையின் போது ஆஜராவதை உறுதி செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரருக்கு 14/08/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், மேற்சொன்ன தகவல் தனக்கு காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது, 30/08/2024 அன்றுதான் தனக்கு கிடைக்கப் பெற்றது எனப் புகார் தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டு அலுவலர் 10/10/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக அறிவுறுத்தியும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் எவ்வித பதிலையும் மனுதாரருக்கு அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, தான் மனுதாரர் கோரிய தகவல்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களின் நகல்களைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் மனுதாரர் தனக்கு தகவல்கள் ஏதும் தேவையில்லை என்றும் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் காலதாமதமாக தகவல்களை அனுப்பியதற்கு அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையத்திடம் கோரினார். **மனுதாரர் புகார் மனு அனுப்பியுள்ளார். எனவே, அப்போதைய (14/08/2024) சார்பதிவாளர் திருமதி/ செல்வி.பகவதிசெல்வி, (தற்போது சார்பதிவாளர், பண்பொளி சார்பதிவகம், தென்காசி மாவட்டம்) அவர்கள் மீது மனுதாரருக்கு தகவல்களை காலதாமதத்துடன் அனுப்பியதற்கும், 10/10/2024 தேதிய பொதுத் தகவல் அலுவலர் திரு.காட்டுராஜா, உதவியாளர், சார்பதிவாளர் (பொ) (தற்போது தற்காலிக பணிநீக்கம்) அவர்கள் மாவட்டப் பதிவாளர் 10/10/2024 தேதியிட்டு அறிவுறுத்தியும், எவ்வித பதிலும் அனுப்பாமைக்கும் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன திருமதி/செல்வி.பகவதிசெல்வி மற்றும் திரு.காட்டுராஜா ஆகியோரிடமிருந்து காரண விளக்க கேட்புக் குறிப்பாணைக்கான விளக்கங்களைப் பெற்று அதனை 15/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 62/SCIC/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
கோவில்பட்டி சார்பதிவகம்
தூத்துக்குடி- 628 502..

2. திருமதி/ செல்வி.பகவதிசெல்வி,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது சார்பதிவாளர்,
பண்பொளி சார்பதிவகம்,
தென்காசி மாவட்டம்)

3. திரு.காட்டுராஜா,
உதவியாளர்,
சார்பதிவாளர் (பொ)
(தற்போது தற்காலிக பணிநீக்கம்)

**புகார்தாரர்**
திரு.எ.சித்தன் த/பெ.எல்லப்பன்
No.679, **B**-1/6, மந்திதோப்பு ரோடு
பாலாஜி நகர், கோவில்பட்டி,
தூத்துக்குடி- 628 502
Phone:94431 22938.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை
பட்டினப்பாக்கம், சென்னை-600 028,

2.பதிவாளர், தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035.

RG/Sr.PC